*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***Crl.M.P. 1429/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PSE-1***

*Name / Father's Name:* **திரு.அண்ணாதுரை த/பெ. முத்துஅம்பாயிரம்**

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27.11.2025.**

துவக்க நேரம் 03.29 A.N

**சாட்சி முன்னிலை. சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

1) நான் தற்பொழுது பெரியேரி கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கும், ராஜவேலுக்கும் இடையே வாய்க்காலில் தண்ணீர் கொண்டு செல்வது சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது. மேற்படி வாய்க்காலில் எனக்கும், ராஜவேலுக்கும் பாத்தியம் உள்ளது.

2) இந்நிலையில், கடந்த சுமார் 2, 3 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் ராஜவேலு மேற்படி வாய்க்காலில் தென்னை மரம் வைத்ததால், என்னால் மேற்படி வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சமுடியவில்லை என்பதால், மேற்படி வாய்க்காலில் பைப் அமைத்து தண்ணீர் பாய்ச்சி வந்தேன். இந்நிலையில், மேற்படி பைப்பை ராஜவேலு பிடுங்கி எறிந்துவிட்டு, எனக்கு மேற்படி வாய்க்காலில் பாத்தியம் இல்லை என்றும், வாய்க்கால் பக்கம் வந்தால் வெட்டுவேன் என்றும் மிரட்டி, என் நெஞ்சில் குத்தினார்.

3) எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆத்தூர், அரசு மருத்துவமனையில் வந்து சிகிச்சைக்கு சேர்ந்தேன். இந்நிலையில், மேற்படி வழக்கானது Referred as Mistake of Law அறிக்கை சம்மந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால்

தெரிவிக்கவேண்டும் என்று சொல்லி கடந்த 10.11.2025 அன்று எனக்கு நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டது. எனக்கு மேற்படி வாய்க்காலில் பாத்தியம் உள்ளது. மேற்படி வாய்க்காலில் நடப்பட்டிருக்கின்ற தென்னைமரத்தை அகன்ற வேண்டும், மேற்படி வாய்க்காலில் தண்ணீர் கொண்டு செல்ல என்னை அனுமதிக்கவேண்டும் என்பதால்தான் இந்த தனிப்புகாரில் தற்பொழுது சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி வாய்க்காலை சுத்தம் செய்து, பழையபடி என்னை மேற்படி வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சவும், ஆடு, மாடுகளை கொண்டு செல்லவும் எதிரிகள் அனுமதிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முடிவு நேரம் 03.37 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.27 17:28:56 +0530

Judicial Magistrate No.2, Attur.